பக்கங்கள்:-31

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 04 | சனிக்கிழமை | 18.05.2024 | அதிர்வு 291

## வயோதிபப் பெண் பஸ் மோதி மரணம்



பஸ் மோதி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தப் பரிதாபச் சம்பவம் கம்பளை, எக்கால 06

# ஆழ்கடலில் தத்தளித்த 3 வாழைச்சேனை மீனவர்களை காப்பாற்றிய கடற்படையினர்; ஒருவர் சடலமாக மீட்பு!

## மற்றொருவரைக் காணவில்லை







**(கனகராசா சரவணன்)**

வாழைச்சேனையில் இருந்து கடந்த 12 ஆம் திகதி ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களின் இயந்திர படகு ஒன்று உடைந்து அது நீரில் மூழ்கியதையடுத்து, கடலில் தத்தளித்த 3 மீனவர்களை உயிருடனும் ஒருவரை சடலமாகவும் நேற்று வெள்ளிக்கிழமை மாலையில் கடற்படையினர் மீட்டுள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். 07

# மறக்க முடியாத தமிழினப் படுகொலை: 15ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று!

## பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் மண்ணில்



**மறக்கவும் முடியாத - மன்னிக்கவும் முடியாத தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், தமிழர்கள் பரந்து வாழும் இந்தப் பூமிப் பந்தின் எல்லாத் திசைகளிலும் இன்று பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளன. பிரதான நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இடம்பெறவுள்ளது.** 06

# கொழும்பிலும் நினைவேந்தல்! மிக முக்கிய திருப்புமுனையே!!

## சுமந்திரன் எம்.பி. உரை



**(ந.லோகதயாளன்)**

“வடக்கு, கிழக்கில் போரின் இறுதிக் கட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருகின்ற இந்த வாரத்தில் நாட்டின் தலைநகரிலும் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுவது தமிழ் மக்களின் வேதனையில் தெற்கு மக்களும் பங்குகொள்கின்றார்கள் என 06



தாம் ஜனாதிபதியாக இருந்த போது மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளத் தவறிய பல செயல்களுக்காக பல வழக்குகளை எதிர்கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்த வழக்குகளுக்குச் சட்டத்தரணிகளை நியமிக்க முடியாமல் அல்லாடுகின்றார். முன்னாள் ஜனாதிபதிக்கு அரச சட்டத்தரணிகளை வழங்க இயலாது என்று சட்டமா அதிபர் கைவிரித்து விட்ட நிலையில், சட்டத்தரணிகளை தாமே நியமிக்க வேண்டிய கட்டாயத்தில், அதைச் செய்ய 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர் பிரித்தானிய நகரம் ஒன்றின்புதிய முதல்வர்

பிரித்தானிய நகரம் ஒன்றின் புதிய முதல்வராக இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர் ஒருவர் பதவியேற்றுள்ளார்.

தொழில் கட்சியின் உறுப்பினரான இளங்கோ இளவழகன் என்பவரே இப்ஸ்விச் (Ipswich) மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்ட நிலையில் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

“நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்த பெரிய நகரத்தின் முதல்வராக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்” என்று இளவழகன் கூறியுள்ளார்.

இவருக்கான வேட்புமனுவை சபையின் தலைவர் நீல் மெக்டொனால்ட் (Neil MacDonald) முன்மொழிந்துள்ளார்.

“போர் மற்றும் துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடிய ஒரு ஏதிலியின் இந்த அறிவிப்பு, ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்கி இங்குள்ள சமூகத்திற்கு அவர் பங்களித்த ஒரு செய்தியை எடுத்துச்செல்லும்” என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த பதவியேற்பின் போது இப்ஸ்விச் இந்து சமூகத்தின் உறுப்பினர்கள் பலரும் அதில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்து ஒருவர் முதல்வராக வருவது நகரத்தின் பெரும் பன்முகத்தன்மையையும் பன்முக கலாசாரத்தையும் காட்டுகிறது என்று நகர இந்து சமாசத்தின் தலைவரான சச்சின் கராலே கூறியுள்ளார்.

முன்னதாக இலங்கையை விட்டு வெளியேறிய இளவழகன் இந்தியா, உகண்டா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் பணிபுரிந்த பின்னர் இங்கிலாந்துக்கு சென்றுள்ளார்.

அவர் ஆரம்பத்தில் கிழக்கு லண்டனில் உள்ள இல்ஃபோர்டுக்கு (Ilford) குடிபெயர்ந்ததோடு 2006 இல் இப்ஸ்விச்சுக்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில் இளவழகன் 2014 இல் செயின்ட் ஜோன்ஸ் தொகுதிக்கான தொழில் கட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டைபாய்டு பாக்ரீரியா பரவும் அபாயம்

# வீட்டில் சமைத்த உணவுகளை உட்கொள்ளுமாறு அறிவுறுத்து!

சமகாலத்தில் மக்கள் மத்தியில் டைபாய்டு பாக்ரீரியா பரவும் அபாயம் இருப்பதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

டைபாய்டு பாக்ரீரியா மலக் கழிவுகளால் உருவாகிறது மற்றும் அது பாதிக்கப்பட்ட நபரின் மலத்திலிருந்து மற்றொரு நபருக்குப் பரவுகிறது.

வீட்டில் சமைத்த உணவை உட்கொள்ளாதவர்கள் மற்றும் வெளி இடங்களில் உண்பவர்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இந்தப் பாக்ரீரியாவால் பாதிக்கப்பட்ட ஒருவர் உணவு மற்றும் பானங்களை தயாரிக்கும் போது, அது மற்றொரு நபருக்கு பரவும் அபாயம் உள்ளது.

எனவே இயன்றவரை வீட்டில் சமைத்த உணவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தப் பாக்ரீரியா தொற்று ஏற்பட்டால், காய்ச்சல், மெதுவான இதயத்துடிப்பு, சோர்வு மற்றும் இருமல், தலைவலி மற்றும் மலச்சிக்கல் போன்ற அறிகுறிகள் ஏற்படும் என்று சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, டைபாய்டு பாக்ரீரியாவால் பாதிக்கப்பட்ட நபர்கள் அனைத்து சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களிலிருந்தும் தொடர்புடைய தடுப்பூசிகளை இலவசமாகப் பெறலாம் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# நினைவேந்தல் விடயத்தில் உணர்வுபூர்வமாக செயற்பட அறிவுறுத்துகின்றார் கரு ஜயசூரிய



யுத்த காலத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் விடயத்தில் ஒட்டுமொத்த சமூகமும் உணர்வுபூர்வமாக செயற்பட வேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல்போன இலங்கை பிரஜைகளை நினைவுகூர்ந்து மூதூரில் கஞ்சி வழங்குவதற்கு செய்திருந்த ஏற்பாடுகளுக்கு அரச அதிகாரிகள் எதிர்வினை ஆற்றியிருக்கின்றமை தொடர்பாக மிகுந்த வருத்தம் அடைகிறார் எனத் தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தமக்கு நெருக்கமானவர்களின் மரணம் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு இருக்கும் மனவேதனையை ஒரு சமூகம் என்ற வகையில் உணர்வுபூர்வமாக புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்த நாட்டை இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்லாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது ஒட்டுமொத்த சமுதாயத்தினரதும் பொறுப்பாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதற்கமைய அரச அதிகாரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகமும் இது போன்ற சூழ்நிலைகளின்போது நாட்டின் பொது நலனை முதன்மையாக கருதி செயல்பட வேண்டும் எனவும் இல்லையேல் எமது நாட்டை மீண்டும் இருளில் தள்ளுவதற்கு அதுவே காரணமாக அமையக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்ற பல்வேறு துர்பாக்கிய சம்பவங்களினால் உயிரிழந்த மற்றும் காணாமல் போன அனைவரை எண்ணியும் மிகுந்த மன வேதனை அடைகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு, மீண்டும் இதுபோன்ற சூழல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கும் அவர்கள் அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு அனைத்து தரப்புகளிடத்திலும் கோரிக்கை விடுக்கிறார் எனவும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

# பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஆராய்கின்றோம் என்கின்றார் செல்வம்

## தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கவும் தயாராம்

(கே.வசந்தன்)

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன், தேசியத்தின்பால் உள்ள தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டிலும் ரெலோ ஈடுபடுவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

எமது பூர்வீகம் ஒடுக்கப்படுகின்ற எங்களது தேசத்திலே அதனை மீட்டெடுக்கின்ற வகையிலும், எங்களது நிலங்களை பாதுகாக்கின்ற வகையிலும், எங்களது மக்களுடைய சுவீட்சமான வாழ்வை பெற்றுக் கொடுக்கின்ற வகையிலும் தமிழீழ விடுதலை இயக்கம் தனது கடமையைச் செய்கிறது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஒற்றுமையாக தமிழ்க் கட்சிகளை அணிதிரட்டுகின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருவதோடு தேசியத்தினை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளினை உள்வாங்குவதற்கான பேச்சு வார்த்தையையும் ஆரம்பித்திருக்கின்றோம்.

அந்த வகையிலே எமது மக்களிற்காகவும், மண்ணிற்காக துப்பாக்கி ஏந்திய நாம் எம் மண்ணையும், மக்களையும் காப்பாற்றும் செயற்பாட்டினை தொடர்ந்து செய்வோம். மேலும் எமது வன்னி மாவட்டத்தை குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் பூர்வீகத்தை ஒழிக்கின்ற தென்னிலங்கை சக்திகளின் செயற்பாட்டினைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியினை மேற்கொள்வோம்.

நீதிமன்றத்தில் தமிழரசு கட்சி மீது வழக்கு இருப்பதன் காரணமாக கட்சிகளை ஒன்றிணைக்கும் எமது செயற்பாடு தொடர்பாக இதுவரை தமிழரசுக் கட்சியுடன் கலந்துரையாடவில்லை. இவ்வழக்கு தொடர்பான முடிவு வரும் பட்சத்தில் அவர்களுடன் பேசி பொதுச் சின்னத்தில் இணைந்து அதன் ஊடாக அக்கட்சியுடன் எல்லா விதத்திலும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம்.




ஜனாதிபதி தேர்தலின் முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் என செய்திகள் வருகின்றன. எங்களை பொறுத்த வரை எமது மக்களின் பிரச்சினைகளை ஓங்கி ஒலிக்க வேண்டியதே பிரதானமாகும். அந்த வகையிலே இரண்டு தேர்தல்களையும் சந்திப்பதற்கு தயாராகவே இருக்கிறோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. மாவட்டம்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்ற நிலையிலே திருகோணமலையிலே பொலிஸார் அடாவடிதனமாகவும் மூர்க்கத்தனமாகவும் பெண்களை இழுத்து மோசமாக நடாத்துகின்ற செயற்பாட்டிற்கு எமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளிற்கு தடை உத்தரவு போடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் எமது மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

அந்தவகையில் எமது மக்களை மோசமாக நடாத்துபவர்கள், எமது நிலங்களை அபகரித்தவர்களிற்கு ஜனாதிபதி தேர்தலின் போது எமது மக்கள் முகம்கொடுக்க மாட்டார்கள். அத்தோடு இவ்வாறான செயற்பாடு காரணமாகவே பொது வேட்பாளர் என்ற விடயம் மேலோங்கி இருக்கின்றது. மேலும் இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.– என்றார்.

# தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உறுதிப்படுத்துவதற்கு மே - 18 இன அழிப்பு நினைவு நாளில் ஒன்றிணைவோம்!

## தமிழ்ச் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு அழைப்பு தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கவும் கோரிக்கை

மே 18 இனஅழிப்பு நினைவுநாளில் அனைத்து தமிழ் உறவுகளையும் உணர்வுபூர்வமாக ஒன்றிணையுமாறு அழைக்கிறோம் என தமிழ்ச் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு கோரியிருக்கின்றது.

இன்றைய முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி நேற்று அது வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகம் உறுதிப்படுத்தும் விதத்தில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் நமது சிவில் சமூகங்களின் கூட்டிணைவு முன்வைக்கின்றது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லா நினைவேந்தல்களும் தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. அவை தாயகத்தில் மட்டுமல்ல, உலகப் பரப்பெங்கும் தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. வடக்குக் கிழக்காய் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்தை அவை உணர்வு பூர்வமாகப் பிணைக்கவல்லன.

அதனால்தான் கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவதற்கும் பரிமாறுவதற்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக கடந்த ஆண்டிலிருந்து கிழக்கில் நினைவேந்தலுக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்து வருவது தற்செயலானது அல்ல. வடக்கும் கிழக்கும் உணர்வுபூர்வமாக இணைவதை, தமிழர்களின் தாயகம் ஓர் உணர்ச்சிப் புள்ளியில் ஒன்றிணைவதைத் தடுக்க விரும்பும் சக்திகள் கிழக்கில் நினைவேந்தலைத் தடுக்கின்றன.

இந்த அடிப்படையில் திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய குற்றச்சாட்டில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகிய எமது உறவுகளோடு தமிழ் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு தன் தோழமையை உறுதிப்படுத்துகின்றது. அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றது. ஜனாதிபதி தற்போது முனைப்புக் காட்டும் உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை ஏன் நம்ப முடியாது என்பதற்கு மேற்படி கைது நடவடிக்கைகள் போதிய சான்றுகள் ஆகும்.

நினைவேந்தலை ஆகக் கூடிய மட்டும் பரவலாக்குவதும் தொடர்ச்சியானது ஆக்குவதும்தான் இத்தருணத்தில் தமிழ் மக்கள் செய்ய வேண்டியவை. கிழக்கில் ஓர் ஊரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தடுத்தால் ஏனைய எல்லா ஊர்களிலும் அதை பரவலாக்க வேண்டும். வரும் 18ஆம் திகதி நமது சிவில் சமூக கூட்டிணைவில் வரும் அனைத்து சிவில் சமூகங்களும் தத்தமது எல்லைகளுக்கு உட்பட்டு தத்தமது பிரதேசங்களில் நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறும் நினைவேந்தும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு கொடுக்குமாறும் வேண்டுகிறோம்.

மே 18, தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் இணைக்கின்றது. அது தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வு பூர்வமாகப் பாதுகாக்கின்றது.

அவ்வாறு தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகம் உறுதிப்படுத்தும் விதத்தில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நமது சிவில் சமூகங்களின் கூட்டிணைவு முன்வைக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் உணர்வு பூர்வமாகத் திரளும் தமிழர்கள் அல்லது முள்ளிவாய்க்காலை நோக்கி உணர்வுபூர்வமாக பிணைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள், அதேபோல வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ் மக்களின் தேசியத் திரட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று சிவில் சமூகங்களின் கூட்டிணைவு அழைப்பு விடுக்கின்றது.

**கையொப்பமிடுவோர்.**

+ வணக்கத்துக்குரிய ஆயர் நோயல் இமானுவேல் - திருகோணமலை மறைமாவட்டம்.
+ தவத்திரு அகத்தியர் அடிகளார் - தென்கைலை ஆதீனம், திருகோணமலை.
+ தவத்திரு வேலன் சுவாமிகள் - சிவகுரு ஆதீனம், யாழ்ப்பாணம்.
+ பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் - தலைவர், அரசறிவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்.
+ கலாநிதி. க.சிதம்பரநாதன் - அரங்க செயற்பாட்டு குழு.
+ அருட்பணி த.ஜீவராஜ் - இயேசு சபை சமூக செயற்பாட்டாளர், மட்டக்களப்பு.
+ திரு.நிலாந்தன் - அரசியல் ஆய்வாளர்.
+ திரு.ஜோதிலிங்கம் - சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.
+ அருட்பணி பி.ஞானராஜ் (நேரு) - மனித உரிமை செயற்பாட்டாளர்,மன்னார்.
+ யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.
+ கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம்.
+ நீதி சமாதான ஆணைக்குழு - யாழ் மறை மாவட்டம்.
+ பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரமுச்சி இயக்கம்.
+ தமிழ் சிவில் சமூக அமையம்.
+ மக்கள் மனு - வடக்கு கிழக்கு சிவில் சமூக குழு.
+ வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம்.
+ அறிவார் சமூகம் - திருகோணமலை.
+ அகில இலங்கை மீனவர் மற்றும் விவசாய தொழிலாளர்களின் கூட்டமைப்பு.
+ கரைச்சி வடக்கு சமாசம்.
+ சிவில் அமைப்பு - மட்டக்களப்பு
+ தமிழ் ஊடகத் திரட்டு.
+ மாவட்ட கமக்காரர் அமைப்பு - வவுனியா.
+ தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்.
+ தமிழர் கலை பண்பாட்டு மையம்.
+ எம்பவர் நிறுவனம்.
+ குரலற்றவர்களின் குரல்.
+ மயிலத்தமடு மாதவனை கால்நடை பண்ணையாளர் அமைப்பு.
+ சமூக மாற்றத்துக்கான அமைப்பு - வவுனியா.
+ தமிழ் சமூக செயற்பாட்டாளர்கள் இணையம் - திருகோணமலை.
+ புமுதி சமூக உரிமைகளுக்கான அமைப்பு - திருகோணமலை.
+ நலிவுற்ற சமூகங்களின் அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு - திருகோணமலை.
+ யாழ் ஊடக அமையம்.
+ வடமாகாண கடலோடிகள் சங்கம்.
+ வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
+ தமிழ் செயற்பாட்டாளர்கள் இணையம் - திருகோணமலை.



INDSRI FERRY

## வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலனிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



IndSri Ferry Services Pvt Ltd
# 143/1, Uttamar Gandhi Road, Opp The Park Hotel,
Thousand Lights West, Nungampakkam,
Chennai - 600034, Tamil Nadu, India.

ANDROID APP ON Google play | Download on the App Store

W: www.sailindsri.com

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாமல் – அதற்குக் கொட்டிக் கொடுக்க இயலாமல் – அவர் திண்டாடிக் கொண்டிருக்கின்றார் என்பது தெரிந்ததே.

அதே நிலைமை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இப்போது வந்துவிட்டது.

சிறுவர்கள் உட்பட 8 அப்பாவித் தமிழ் மக்களை 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி வேறு சிலருடன் சேர்ந்து கொன்ற குற்றத்திற்காக கொழும்பு 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றத்தினால் இராணுவ சார்ஜண்ட் ஆர்.எம்.சுனில் ரட்நாயக்காவுக்கு 2015 ஜுன் 25ஆம் திகதி மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பின்னர் 2017 மே 20ஆம் திகதி அது தொடர்பான மேன்முறையீட்டை விசாரித்த ஐவர் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் மரண தண்டனைத் தீர்ப்பை ஏகமானதாக உறுதி செய்திருந்தது.

அந்த மரண தண்டனைக் கைதிக்கு 2020 மார்ச் 26 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்திருந்தார்.

அதற்கு எதிராக – அந்த மன்னிப்பளித்த நடவடிக்கையை ஆட்சேபித்து – கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியிலிருந்து இறங்கிய பின்னர், ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் மூன்று சார்பில் – மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து மற்றும் அம்பிகா சற்குணநாதன், கொலையுண்ட எட்டுப் பொது மக்களின் உறவினர்கள் ஆகியோரை மனுதாரர்களாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்கள் சார்பில் – ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதாடி இருந்தார்.

கோட்டாபயவினால் பொது மன்னிப்பளிக்கப்பட்ட துமிந்த சில்வாவின் விடுதலைக்கு எதிராக சுமந்திரன் வாதாடிய இதே போன்ற வழக்கில் துமிந்த சில்வாவின் பொது மன்னிப்பு ரத்தான பின்புலத்திலேயே இந்த வழக்கிலும் சுமந்திரனின் வாதத்தை அடுத்து மனுவை விசாரணைக்கு உயர் நீதிமன்றம் ஏற்று இருந்தது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தின் முன்னால் நேற்று விசாரணை ஆரம்பமாக இருந்தது. ஆனால் வழக்கு நீதியரசர்கள் யஸந்த கோட்டாகொட, அச்சல வெங்கப்புலி ஆகிய இரண்டு நீதியரசர்களின் ஆயத்தின் முன்பே நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டதால் மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன் செப்டம்பர் 4ஆம் திகதி முதல் விசாரணைக்கு நேற்று திகதி நிர்ணயிக்கப்பட்டது.

நேற்று வழக்கு அழைக்கப்பட்ட போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ, அவர் பொது மன்னிப்பளித்து விடுவித்த சுனில் ரட்நாயக்காவோ அல்லது அவர்கள் இருவர் சார்பிலான சட்டத்தரணிகளோ மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

ஆகையினால் இருவருக்கும் திரும்பவும் அழைப்பாணை அனுப்ப உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ஜனாதிபதிப் பதவி காலத்தில் தாம் பண்ணிய விடயங்கள் தொடர்பான வழக்குகளுக்கு சட்டத்தரணிகளைத் தேடுவது மைத்திரிபால சிறிசேன போல கோட்டாபயவுக்கும் நெருக்கடியாகத்தான் இருக்கப் போகின்றது போலும்.

இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட தமது பதவி காலத்தின் முடிவில் எத்தனை வழக்குகளை எதிர்கொள்ளப் போகின்றாரோ தெரியவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை குசும்புத்தனமான முறையில் ஒத்தி வைத்த நடவடிக்கைக்காக அவர் நிச்சயம் நீதிமன்ற விசாரணையை எதிர் நோக்க வேண்டியிருக்கும், அதிலிருந்து அவர் தப்பவே முடியாது என்றே நினைக்கின்றேன்.

---

## கொழும்பிலும் நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணத் தோன்றுகின்றது. இது மிகவும் முக்கிய ஒரு திருப்புமுனையாகும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நேற்று மாலை இடம்பெற்றது. "யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்ற மனித நேய நட்பு ரீதியான கூட்டம்" எனும் தொனிப் பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் சுமந்திரன் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கொடூரமான போரில் மரணித்த அனைவருக்காகவும் இந்த நிகழ்வைத் தலைநகரில் நடத்துவது மிகவும் ஒரு ஆரோக்கியமான திருப்புமுனை. 15 ஆண்டுகளின் பின்புகூட இப்படியான நிகழ்வு நடப்பது அது திருப்புமுனையின் ஆரம்பம் என்று நான் நினைக்கின்றேன்.

2010ஆம்ஆண்டுமுதலாவதுநினைவு கூரல் எதிர் நோக்கியிருந்தபோதுதான் நான் முதலாவதாக நாடாளுமன்றத்துக்கு வந்து ஓர் உரையாற்றினேன். அந்தவேளையிலே கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த ஆணைக்குழுவின் பரிந்துரை ஒரு குறித்த தினத்திலே தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்பது. நாங்கள் வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்றவர்கள் என்றபடியால அந்த யோசனையை வரவேற்றோம். அதிலே சேர்ந்து ஈடுபடுவோம் எனச் சொல்லியிருந்தோம். ஆனால், இதுநாள் வரைக்கும் நிகழவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காலிமுகத்திடலிலே மக்களாக "அறகலய" போராட்டத்தை நடத்தியபோது ஒரு நிகழ்வைச் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு மரணித்த அனைத்து இலங்கையர்களுக்குமாக இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது.

வடக்கு, கிழக்கிலேயிருந்து மக்களுடைய நல்லெண்ணத்தை இந்த வேளையிலே உங்களிடத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். தங்களுடைய வேதனையிலே நீங்களும் பங்குகொள்கின்றீர்கள் என்பது அவர்களுக்கு ஒரு சிறு ஆறுதலை மனதிலே கொடுக்கும்." – என்றார்.

## வயோதிபப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நகரில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை நகரில் இருந்து உலப்பனை வரை பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பஸ் மோதியே 70 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

சடலம் கம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் எக்கால பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## மறக்க முடியாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் இலங்கை அரச படைகளால் மிகக் குறுகிய நிலப்பரப்புக்குள் முற்றுகையிடப்பட்ட பல இலட்சம் தமிழ் மக்கள், தரை – கடல் – வான் என மூன்று மார்க்கங்களிலிருந்தும் மூர்க்கத்தனமான குண்டுத் தாக்குதல்களை எதிர்கொண்டனர். பெருமளவு தமிழ் மக்களை சிங்கள அரச படைகள் அநியாயமாகக் கொன்று குவித்தன. போதாக்குறைக்கு அந்த மக்களுக்கான உணவு, மருந்துகள் என்பனவற்றை அனுப்பாமல் துடிதுடித்தும் இலங்கை அரசு சாகடித்தது.

இறுதிப் போர் என முள்ளிவாய்க்கால் மண்ணில் அரங்கேறிய அந்தக் கோரத் தாண்டவத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். அந்தப் போரின் இறுதி வாரத்திலேயே பல ஆயிரக் கணக்கானோரின் வாழ்வுகள் கருக்கப்பட்டன. பல ஆயிரக்கணக்கானோர் எங்கு இருக்கின்றனர் என்று தெரியாத அவலம் உருவாகியது. பல குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டனர். தோப்பாக இருந்த பலர் தனிமரமாகினர்.

இந்தப் பேரவலத்தின் நினைவு வாரம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகியது.

நினைவேந்தல் வாரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் என்ற அடையாள செயற்பாடு பல தரப்புக்களாலும் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு மேலாக, குருதிக் கொடை நிகழ்வுகளும், நினைவேந்தல் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

இறுதி நாள் நிகழ்வுகள் உலகில் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் இன்று பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளன. பிரதான நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெறவுள்ளன.

காலை 07 மணி தொடக்கம் 09.30 மணிவரை முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரைப் பகுதியில் இறுதிப் போரில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கு உரிய பிதிர்க்கடன் நிறைவேற்றும் கிரியைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் முள்ளிவாய்க்கால் பகுதியில்அமைந்துள்ளபுனிதபவுல்தேவாலயத்தில் காலை 08.30 மணிக்கு விசேட திருப்பலி ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பொதுச் சுடரேற்றப்பட்டு, தமிழினப் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் நடத்தப்படவுள்ளன.

இதில் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டுக் குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# AI தொழில் நுட்பத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மிளகாய் செய்கையைப் பார்வையிட்ட டக்ளஸ்!





கிளிநொச்சியில் AI தொழில் நுட்பத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள விவசாய செய்கையில் மிளகாய் செய்கையை நேரில் சென்று பார்வையிட்டார் அமைச்சர் டக்ளஸ்.

நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கையின் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில் அதனை முன்னெடுக்கத் தயாராக உள்ள தொழில்முனைவோருக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கையின் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்தத் திட்டம் இன்று நாடு முழுவதும் ஜனாதிபதியால் அதிகார பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் விவசாய நவீன மயமாக்கல் வேலைத் திட்டத்திற்காக 100 பிரதேச செயலாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 100 இடங்களில் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் கிளிநொச்சியில் முதன்முறையாக நிர்மாணிக்கப்பட்ட இடங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

அச்சமயம் ஊடகவியலாளருக்கு கருத்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதியால் நாடு முழுவதும் நவீன விவசாயத்துக்காக 100 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில், யாழ்ப்பாணத்தில் உடுவில் பிரதேசமும், கிளிநொச்சியில் கண்ணகிபுரமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன – எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

# இரத்தினபுரி தோட்டத்தில் வயோதிபர் மீது தாக்குதல்

## உதவி முகாமையாளரின் அடாவடிக்கு இ.தொ.கா. கண்டனம்



"இரத்தினபுரி, ஹேயஸ் தோட்டத்தில் ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர் ஒருவர் மீது குறித்த தோட்டத்தின் உதவி முகாமையாளர் தாக்குதல் நடத்தியுள்ளார். இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் உப தலைவருமான ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"சுப்ரமணியம் ராஜலிங்கம் என்பவர் மீதே நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர் தற்போது கொலொன்ன ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பில் அவரது மகள் மற்றும் பிரதேச மக்கள் எனக்குத் தெரிவித்ததையடுத்து, இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு இரத்தினபுரி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குத் தொலைபேசியினூடாகத் தெரியப்படுத்தினேன்.

இரத்தினபுரி மாவட்டத்தின் சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் தோட்ட முகாமைத்துவங்களுக்கும் இடையில் காணப்படும் நட்புறவைப் பயன்படுத்தி தோட்ட அதிகாரிகள் பெருந்தோட்ட மக்களைத் தாக்கும் கலாசாரத்தை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது கேட்டுக்கொண்டேன்." – என்றார்.

காணி விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

## ஆழ்கடலில் தத்தளித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாறை நிந்தவூர் 9 ஆம் பிரிவு அரசடி மையவாடி வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய முகமது அலியார் இபிறாலெப்பை என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த 5 மீனவர்கள் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்காகக் கடந்த 12 ஆம் திகதி கடலுக்கு இயந்திர படகு ஒன்றில் சென்றுள்ளனர்.

ஆழ்கடலில் படகு உடைந்து நீரிழ் மூழ்கியதையடுத்து அதில் இருந்த மீனவர்கள் தப்பி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் மீனவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தமையை நேற்று வெள்ளிக்கிழமை மாலை கண்டனர். தத்தளித்துக் கொண்டிருந்த 3 மீனவர்களை உயிருடனும் ஒருவரை சடலமாகவும் மீட்டனர். ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இதில் உயிருடன் மீட்கப்பட்ட ஒருவர் ஆபத்தான நிலையில் இருந்தமையையடுத்து அவரை திருகோணமலை கடற்படை முகாமிற்குக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஏனைய இருவரையும், மற்றையவரின் சடலத்தையும் வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்திற்கு நேற்று இரவு கடற்படையினர் கொண்டுவந்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நினைவேந்துவோம்!

இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் உயிரிழந்த நமது பல்லாயிரம் உறவுகளை நாம் நினைவேந்தும் தினம் மட்டுமல்ல, அவர்களை ஈவிரக்கமற்ற முறையில் கொன்றொழித்த பேரினவாத வெறிப்போக்கு ஆட்சியாளர்களின் உண்மை முகத்தை - நிஜ சொரூபத்தை - உலகின் முன் பகிரங்கமாக அம்பலப்படுத்துவோம் என்ற பிரதிக்ஞையை நாம் திரும்பவும் திரும்பவும் - ஆண்டு தோறும் - நமது உறுதி மொழியாக எடுத்துக் கொள்ளும் தினமும் கூட.

அந்தப் பேரழிவின் - பேரழிப்பின் - பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகளை அம்பலப்படுத்தி, தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, நீதி - நியாயமான விசாரணைகளை முன்னெடுக்கச் செய்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மீள நிகழாமையையும், பாதிப்புற்றோருக்கு நீதியும் உரிய இழப்பீடும் கிடைக்கின்றமையையும் உறுதிப்படுத்த நாம் அனைவரும் சபதம் எடுக்கும் தினமாகவும் இது அமைகின்றது.

இந்தப் பேரிழப்பின் பின் 15 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இனம் கோட்பாட்டு ரீதியிலும், செயற்பாட்டு முறையிலும் பல துண்டுகளாகப் பிளவுபட்டு, பிரிந்து நிற்கின்றது. அத்தகைய நம்மை உணர்வு ரீதியாக, சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தி, நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் ஓர் கூர்மை நாளாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் நம் முன்னே நம்பிக்கையூட்டும் நாளாக விரிந்து நிற்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் கண்மூடித்தனமாக இனவழிப்பு நடவடிக்கை பௌத்த - சிங்களப் பேரினவாதத்தினால் கொடூரமாக முன்னெடுக்கப்பட்டது என்பது உலகப் பரகசியம். வெறும் வார்த்தை சொல்லாடல்களில் கொழும்பு சிங்கள அரசுத் தலைமை அதை மறுத்து - மறைத்து - கொண்டிருந்தாலும் இலங்கையில் என்ன நடந்தது என்பது உலகறிந்த ரகசியம்.

நேற்று அதனைத்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தனது பகிரங்க அறிக்கை மூலம் அம்பலப்படுத்தி இருக்கின்றது.

+ காணாமலாக்கப்பட்டோர் எண்ணிக்கையை ஏற்றுக்கொண்டு அரசு அதனை அறிவிக்க வேண்டும்.

+ பாதுகாப்பு படையினரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களும் ஆள்கள் காணாமலாக்கப்படுதலுடன் தொடர்புபட்டிருந்தனர் என்பதை ஏற்றுக் கொண்டு, அதற்கு அரசு பொது மன்னிப்புக் கோர வேண்டும்.

+ காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கு நீதியான - சுதந்திரமான - பக்கச் சார்பற்ற - விசாரணைக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

+ சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமான சட்டங்களைக் கையாள்வதற்கு விசேட அரச சட்டத்தரணி மற்றும் தற்காலிக சிறப்பு நீதிமன்றம் ஆகிய நியமனங்களைச் செய்ய வேண்டும்.

+ பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நேர்மையான - தேர்ந்த - செம்மையான - விசாரணைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

+ மீறல்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள், சந்தேகிக்கப்படுபவர்களை உயர் பதவிகளில் நியமிக்கக் கூடாது.

+ இடம்பெற்ற குற்றங்கள், மீறல்கள் தொடர்பில் நீதி - நியாயமான விசாரணைக்கும் பொறுப்பு கூறல் நடவடிக்கைக்கும் உறுதியான நடவடிக்கைகளை நேர்மையுடன் எடுக்க வேண்டும்.

- என்று கோரியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அறிக்கை, இலங்கையில் பொறுப்புக் கூறலை நிலை நாட்டைச் செய்வதற்காக சர்வதேச சமூகம் தனது 'உலகளாவிய அதிகார வரம்பு கடந்த பூகோள நியாயாதிக்கத்தை' பிரயோகித்தல் உட்பட சகல வழிமுறைகளையும் பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி இருக்கின்றது.

இப்படி சர்வதேசத்திலிருந்தும், ஐ.நாவில் இருந்தும் நீதி கோரும் குரல் எழுந்திருப்பது தமிழர்களின் முள்ளிவாய்க்கால் நிலைவேந்தலின் பின்னால் புதைந்திருக்கும் நியாயங்களுக்கான சாட்சியம் தான்.

எமது இனத்தைக் கருவறுத்த இந்த நாளை நாம் பேதங்கள் அனைத்துங் களைந்து - கடந்து - ஒன்றுபட்டு தமிழர் தேசமாக நினைவேந்துவதுதான் நாம் பறிகொடுத்த அந்த உறவுகளுக்கான நீதியை நிலை நிறுத்துவதற்கான நமது முதல் நடவடிக்கையாக இருக்க முடியும்.




# ரேபரேலியில் ராகுல் காந்திக்காக பிரச்சாரம் செய்த சோனியா காந்தி!

“எனது மகனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் என்னை உங்கள் சொந்தமாக நடத்தியது போல், ராகுலையும் உங்கள் சொந்தமாக நடத்த வேண்டும்.” என்று ரேபரேலியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் சோனியாகாந்தி உருக்கமாக பேசினார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுகிறார். இந்தத் தொகுதிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் நேற்று அங்கு நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியாகாந்தி பங்கேற்று பேசினார். அப்போது அவர், நீண்ட நாள்களுக்குப் பிறகு இன்று உங்களுடன் இருக்கும் வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். என் இதயத்திலிருந்து சொல்கிறேன், நான் உங்களுக்கு நன்றியுள்ளவளாக இருக்கிறேன். உங்கள் முன் என் தலையை தாழ்த்தி மரியாதையுடன் எனது வணக்கத்தை தெரிவிக்கிறேன்.

20 ஆண்டுகள் எம்.பி.யாக பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்துள்ளீர்கள். இதுவே என் வாழ்வின் மிகப் பெரிய சொத்து. ரேபரேலி எனது குடும்பம். அதேபோன்று அமேதியும் எனது வீடு. என் வாழ்வின் இனிய நினைவுகள் மட்டும் இங்கு இணைக்கப்படவில்லை, எங்கள் குடும்பத்தின் வேர்கள் கடந்த 100 ஆண்டுகளாக இந்த மண்ணோடு இணைக்கப்பட்டுள்ளன. அன்னை கங்கையைப் போன்ற புனிதமான இந்த உறவு, அவத் மற்றும் ரேபரேலி விவசாயிகள் இயக்கத்தில் தொடங்கி இன்று வரை தொடர்கிறது.

இந்திரா காந்தி உங்கள் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார். இந்திரா காந்தியும் ரேபரேலி மக்களும் எனக்குக் கொடுத்த அதே உயர் மதிப்பீடுகளை ராகுலுக்கும் பிரியங்காவுக்கும் கொடுத்துள்ளேன். அனைவரையும் மதிக்க வேண்டும், பலவீனமானவர்களை பாதுகாக்க வேண்டும், அநீதிக்கு எதிராக, மக்களின் உரிமைகளைக் காக்க போராட வேண்டும்.

உங்கள் ஆசிர்வாதத்தாலும் அன்பாலும் என் மனம் நிரம்பியது. உங்கள் அன்பு என்னை ஒருபோதும் தனிமையாக உணர விடவில்லை. என்னிடம் உள்ள அனைத்தும் உங்களால் எனக்கு கொடுக்கப்பட்டது. என் மகனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் என்னை உங்கள் சொந்தமாக நடத்தியது போல், ராகுலையும் உங்கள் சொந்தமாக நடத்த வேண்டும். ராகுல் உங்களை ஏமாற்ற மாட்டார்” என்று சோனியா காந்தி தெரிவித்தார்.

# அடுத்த தலைமுறைக்கு வழிவிடாமல் மோடி தாமே பதவியில் நீடிப்பதற்குத் துடிக்கிறார்

## விமர்சிக்கிறார் சிவ சேனா தலைவர்



அடுத்த தலைமுறைக்கு வழிவிடுவதற்குப் பதிலாக, மீண்டும் தானே பிரதமர் ஆக வேண்டும் என்று நரேந்திர மோடி ஆர்வம் காட்டுகிறார் என சிவ சேனா கட்சித் தலைவர் உத்தவ் தாக்கரே விமர்சித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் தானே மக்களவைத் தொகுதியில் தற்போதைய எம்பியும், தனது கட்சி வேட்பாளருமான ராஜன் விச்சாரேவை ஆதரித்து உத்தவ் தாக்கரே வாக்கு சேகரித்தார்.

தானே, மகாராஷ்டிர முதல்வரும் சிவ சேனாவில் பிளவை ஏற்படுத்தியவருமான ஏக்நாத் ஷிண்டேவின் செல்வாக்கு மிக்க பகுதி என்பதால், இந்தத் தொகுதி இரு தரப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது. இந்த தொகுதியில் ஏக்நாத் ஷிண்டே கட்சி சார்பில் நரேஷ் மஸ்கே போட்டியிடுகிறார்.

பிரச்சாரத்தின் போது பேசிய உத்தவ் தாக்கரே, இந்தத் தொகுதியில் நடைபெறும் போட்டி விசுவாசத்துக்கும் துரோகத்துக்கும் இடையிலான மோதல். துரோகம் இழைத்தவர்களுக்கு தானே தொகுதி மக்கள் பாடம் புகட்ட வேண்டும். சிவ சேனாவும் தானேவும் ஒரு தனித்துவமான பிணைப்பைக் கொண்டுள்ளன. சிவ சேனாவின் தொடக்க காலங்களில் கட்சியை காலூன்ற வைத்தவர்கள் தானே நகர மக்கள்தான்.

பிரதமர் நரேந்திர மோடி, என்னையும், சரத் பவாரையுமே தொடர்ந்து குறிவைத்துப் பேசுகிறார். எனது தலைமையிலான சிவ சேனாவை போலி சிவ சேனா என அவர் விமர்சிக்கிறார். அதேபோல், சரத் பவாரை, அலைந்து திரியும் ஆத்மா என விமர்சிக்கிறார். 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த நரேந்திர மோடி, அடுத்த தலைமுறைக்கு வழி விட்டிருக்க வேண்டும்.

மாறாக, மீண்டும் தானே பிரதமர் ஆக வேண்டும் என்பதிலேயே அவர் ஆர்வம் காட்டுகிறார். தேர்தலில் அதிக தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே, அவர் வாரிசு அரசியல் பற்றி பேசுகிறார். மகாராஷ்டிராவில் இண்டியா கூட்டணி வலிமையாக இருக்கிறது.– எனத் தெரிவித்தார்.

மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 48 தொகுதிகளில், முதல் 4 கட்டத் தேர்தல்களில் 35 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நிறைவடைந்து விட்டது. எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் கட்டத் தேர்தலில் மீதமுள்ள 13 தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## இந்தோனேஷியா மேற்கு ஜாவா மாகாணத்தில்

# மாணவர் பயணித்த பஸ் விபத்து: 11 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்!

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியா மேற்கு ஜாவா மாகாணத்தை சேர்ந்த பாண்டுங் பகுதியில் நடந்த ஒரு பட்டமளிப்பு விழாவில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

விழா முடிந்ததும் பஸ் ஒன்றில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஜகார்தா பகுதியில் உள்ள உயர்நிலைப் பாடசாலைக்கு திரும்பிக் கொண்டு இருந்தனர். அந்த பேருந்தில் மொத்தம் 61 பேர் பயணம் செய்தனர்.

மலைகள் நிறைந்த பகுதியில் பஸ் கீழே இறங்கி கொண்டு இருந்தபோது திடீரென பிரேக் பழுதானது என்று கூறப்படுகிறது.

இதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மலையில் முன்னால் சென்று கொண்டிருந்த கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது பயங்கரமாக மோதியது.


இந்த கோர விபத்தில் பஸ்ஸில் இருந்த 9 பேர் இடிபாடுகளுக்கு இடையில் சிக்கிச் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 50 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இது பற்றி தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து சென்று படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு சிகிச்சை பலன் அளிக்காமல் 2 பேர் உயிர் இழந்தனர். பலியானவர்களில் 9 பேர் மாணவர்கள், ஒரு ஆசிரியர், மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் என மொத்தம் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் மாதாந்தச் சம்பளம் எவ்வளவு?


BULLETIN DE PAIE
Janvier 2024



அரசுத் தலைவரது சம்பள விவரப் பட்டியல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தி ஊடகங்களில் வெளியாகியுள்ளது. அதன்படி ஜனவரி (2024) மாதம் அதிபர் பெற்றுக் கொண்ட வரிக் கழிவுகளுக்கு முந்திய சம்பளத் தொகை 14 ஆயிரத்து 586 (14 586.32) யூரோக்கள் ஆகும். அவரது ஊதியம் முழு நேரப் பணிக்கானது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் செயற்பாடாகக் குடிமகன் ஒருவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட எலிஸே மாளிகை ஜனாதிபதி இரண்டு மாதங்களுக்கான சம்பளப் பட்டியலை அவருக்கு வழங்கியுள்ளது.

மக்ரோனின் டிசெம்பர் 2023, ஜனவரி 2024 ஆகிய இரண்டு மாதங்களுக்கான சம்பளப் பட்டியல்கள் கிடைத்துள்ளன என்ற தகவலை "லிபரேஷன்" பத்திரிகை வெளியிட்டுள்ளது.

முன்னாள் பத்திரிகையாளர் ஒருவரே சில மாதகால முயற்சிகளுக்குப் பின்னர் அரசுத் தலைவரது சம்பளப் பட்டியல்களைப் பார்வைக்குப் பெற்றுள்ளார்.

பிரான்ஸில் அரச மற்றும் பொது நிர்வாக சேவைகளில் உள்ள ஒருவரது வருமானம், சொத்து என்பன தொடர்பான ஆவணங்களைப் பார்வையிடுவதற்கு நாட்டின் குடிமகன் ஒருவருக்கு நிபந்தனை அற்ற உரிமை உள்ளது.

அதற்கான இணையத் தளத்தில் வேண்டுகோளைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆவணங்களைப் பார்வைக்குப் பெற முடியும். அரச நிர்வாகங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற 1978 ஆம் ஆண்டின் இந்தச் சட்டம் பலரும் அறிந்திராத ஒன்றாகும்.

# 15 வருட நல்லிணக்க நடவடிக்கைகள் முழுத் தோல்வி என்கிறது மக்கள் மனு

## மேலாதிக்கத்தினால் அதனை ஏற்படுத்த முடியாது என விசனம் சிவில் சமூகக் குழுவின் மே-18 பற்றிய அறிக்கையில் விவரிப்பு




மேலாதிக்கத்தினால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று வடக்கு – கிழக்கு சிவில் சமூகக் குழுவான "மக்கள் மனு" அமைப்பினால் மே-18 தினம் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும். தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முள்ளிவாய்க்கால் கஞ்சி விவகாரத்தில் தடைகள் ஏற்படுத்தப்படுவதும், கைதுகள் இடம்பெறுவதும்,

அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சியின் போலி முகத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றன. அரசாங்கம்,

தென்னாபிரிக்க ஆலோசனையின் கீழ், உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழு தொடர்பில், உச்சரித்துவரும் நிலையில்தான், கஞ்சி காய்ச்சியவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஒருவர் அல்லது ஒரு குழுவினர் கஞ்சி காய்ச்சுவதும் அதனை மற்றவர்களுக்கு வழங்குவதும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்? தர்க்கரீதியில் இதற்கு அரசால் பதிலளிக்க முடியுமா?

யுத்தம் நிறைவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அனைத்துமே நல்லிணக்கம் தொடர்பில் பேசிவந்திருகின்றன. ஆனால் இப்போதும் கூட, பாதிக்கப்பட்ட மக்கள், தங்களின் உறவுகளின் இழப்பை, அமைதியாக நினைவுகூர முடியாமல் இருக்கின்றனர். எதோவொன்று தங்களை பின்தொடர்வதான அச்சத்துடன்தான், ஒவ்வொரு தமிழ் குடிமகனும் ஒன்றுகூட வேண்டியிருக்கின்றது. ஒரு நாட்டின் மக்கள் கூட்டம் அச்சமின்றி, அரசையும்

அரசாங்கத்தையும் எதிர்கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு சூழல் இருந்தால்தான், அந்த நாட்டில்

நல்லாட்சி இருப்பதாக நாம் கூறமுடியும். நடைபெற்ற, நடைபெறும் சம்பவங்கள் ஒவ்வொன்றும், இலங்கைத் தீவில், நல்லாட்சிப் பண்புகள், மிகவும் பலவீனமாக இருக்கின்றன என்பதையே காண்பிக்கின்றன.

இது ஒரு விடயத்தை தெளிவாக எடுத்துரைக்கின்றது – அதாவது, இலங்கையின் மனித உரிமைகள்

மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட ராஜதந்திர அழுத்தங்கள்

அனைத்தும் தோல்வியுற்றிருக்கின்றன. நினைவுகூரல் மீதான தடைகளும் இடையூறுகளும் இதனை

உறுதிப்படுத்துகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களும், அவர்களது உணர்வில் ஒன்றுபட நினைக்கும் மக்களும், தங்களின்

உணர்வுகளை அமைதியான வழிகளில் வெளிப்படுத்துவதற்கான பூரண சுதந்திரமுள்ளவர்களாவர். அதனை தடுக்க முற்படும் அனைத்து வகையான செயற்பாடுகளும் கண்டனத்துக்குரியவையாகும். அந்த வகையில் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தை "மக்கள் மனு" வடக்கு – கிழக்கு சிவில் சமூகக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் நினைவுகூரல் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும், அத்துடன் இலங்கையின் நல்லிணக்க மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் கரிசனையை வெளிப்படுத்திவரும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்குலக நாடுகள் ஆக்கபூர்வமான தலையீடுகளை செய்ய முன்வர வேண்டுமென்றும் "மக்கள் மனு" கோருகின்றது.

உணர்வால் ஒன்றுபட்டிருக்கும் மக்கள் கூட்டம், முள்ளிவாய்க்காலின் பதினைந்தாவது ஆண்டில்

ஒன்றுபட்டிருக்கின்றது. ஆனால் முன்னரைப் போலவே, அச்சத்துடனும், பதற்றத்துடனுமே, மக்கள்

இம்முறையும் ஒன்று கூடவேண்டியிருக்கின்றது. இது, பதினைந்து வருடகால நல்லிணக்க முயற்சிகளின்

தோல்வியாகும். மேலாதிக்கத்தினால் ஒரு போதுமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இதனை புரிந்து கொண்டு செயற்பட்டால் மட்டும்தான், அரசாங்கத்தினால் நல்லிணக்க முயற்சியில் முன்னோக்கி பயணிக்க முடியும். – என்று உள்ளது.

# புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியாளர் ஒருவர் கைது!



புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன், சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஒருவரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பெரியகுளம் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வருகிறது என்று புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த இரகசிய தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, கோடா 1702 லீற்றர் , எரிந்த கோடா 30 லீற்றர், கசிப்பு 58 லீற்றர், பரல் 18, கசிப்பு உற்பத்தியாக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரிடம் மேலதிக விசாரணைகளின் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.




# யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

இனப்படுகொலைப் போரின் வலிகளை தலைமுறைகளிற்குக் கடத்தும் நோக்கில் தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக பீடங்களை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் முள்ளிவாய்க்கால்க் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தினை முன்னிட்டு தினமும் பல்வேறுபட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடம், தொழில்நுட்ப பீடம், பொறியிற்பீட மாணவர்களினால் இந்தக் கஞ்சி பரிமாறுதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.






# யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் கொக்குவிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலையை தலைமுறைகளிற்கு கடத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறுதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை வாரத்தினை முன்னிட்டு தினமும் பல்வேறுபட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீட மாணவர்களினால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு நேற்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.





## சர்வதேச அங்கீகாரம் பெறும்

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை !

- நவீனன் -

இனஅழிப்பு போரை முன்னெடுத்த ஒரு முன்னாள் தலைவரே, அதனை ஏற்றுக் கொள்வதானது சர்வதேச அளவில், ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதொரு முக்கிய சாட்சியமாகவே இருக்கும்.

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சாட்சியம்

முப்பது ஆண்டுகளாக நடந்த ஈழப்போரை, சந்திரிகா குமாரதுங்க "இனப்படுகொலைப் போர்" (genocide war) என்று அடையாளப் படுத்தியிருப்பது முக்கியமானதொரு விடயம். அப்படிக் குறிப்பிடுகின்ற, இனப்படுகொலைப் போரை அவர் அந்தக் காலகட்டத்தில் வழிநடத்தியிருக்கிறார் என்பதும் உண்மையே.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இனப்படுகொலைப் போர் நடந்ததாக குறிப்பிடும் – முப்பது ஆண்டுகளில் – 1994 தொடக்கம் 2005 வரையான 9 ஆண்டுகள் நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு 18ஆம் திகதி போரில் உயிரிழந்தவர்களுக்காக தனது இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,



ஈழத்தில் முன்னெடுக்கப்பட்ட போர் இனப்படுகொலைப் போர் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சந்திரிகா குமாரதுங்க தனது முகநூல் பக்கத்தில், "ஒரு நாட்டையோ – மனித இனத்தையோ போராலோ – வெற்றியாலோ தோற்கடிக்க முடியாது என்றும், முப்பது வருட இனப்படுகொலைப் போரில், நாம் இழந்தவை ஏராளம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான், தமிழர்களுக்கு எதிரான போர் முழுவேகம் பெற்றது. தனது ஆட்சியிலேயே 75 சதவீதமான போரை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டார் என்றும் எஞ்சிய 25 சதவீதமான போரையே மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டு வந்தார் என்றும் சந்திரிகா சில ஆண்டுகளுக்கு முன்னர், கூறியிருந்தமை நினைவிருக்கலாம்.

### இனஅழிப்புப் போர் முக்கிய சாட்சியம்

அண்மைக் காலத்தில் சந்திரிகா குமாரதுங்க நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தாலும், இனப்படுகொலைப் போரில் அவரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தாலும், அவரை விட மோசமான இழப்புக்களையும், அழிவுகளையும் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள்.

அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதால் தான், அவர் தனது இல்லத்தில் 2022 மே 18ஆம் நாளை நினைவு கூர்ந்திருக்கிறார்.

நடந்தது இனப்படுகொலைப் போர் என்ற அவரது பதிவு, இன்றைய நிலையில் இன அழிப்புப் போர் என்பதற்கு முக்கியமானதொரு சாட்சியம்.

2009 மே 19 ஆம் திகதி இனப்படுகொலை மூலம், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ராஜபக்ஷ அரசு, சர்வதேச ஆதரவுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற அடையாளத்துடன் முன்னெடுத்த போர் முற்று முழுதாக தமிழர்கள் மீது ஏவி விடப்பட்டது.

தமிழர்களுக்கு எதிராக

நிகழ்த்தப்பட்ட போரில் தமிழரின் இருப்பையும், அடையாளங்களையும் அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டது என்பதே

15 ▶



## சர்வதேச அங்கீகாரம் பெறும்

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை !

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)
உண்மையாகும்.

### ஆஸ்திரேலிய மாநில நாடாளுமன்ற அங்கீகாரம்

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றம் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு மே 18 ஆந் திகதியைத் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரித்துள்ளது.

இந்த மிக முக்கியமான நாளில், ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிக்கும் நியூ சவுத் வேல்ஸ் முதல் ஆஸ்திரேலிய மாநில நாடாளுமன்றமாகும்.

2022 மே 18 ஆம் திகதிக்கான நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது தமிழ் சமூகத்தின் பல உறுப்பினர்களின் பல வருட கடின உழைப்பு மற்றும் வாதத்தின் உச்சகட்டத்தின் விளைவாகும்.

இலங்கைத் தீவில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பல மனித உரிமை மீறல்களையும், நீதியை நாடும் சர்வதேச சமூகத்தையும் எதிர்கொள்கிறது. இந்த அட்டூழியங்களுக்குக் காரணமானவர்கள் கணக்குக் காட்டப்படுவதை உறுதிசெய்ய நிறைய வேலைகள் காத்திருக்கின்றன.

தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தில், தீவில் அமைதி, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் மீண்டும் உறுதியளிக்கிறோம் என நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றத்தில் 2022 மே 18ஆம் திகதியைத் தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### ஆஸ்திரேலியாவில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி

ஆஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கொண்டு வரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமானது, முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி தினத்தை அங்கிகரித்ததோடு இங்கு வாழும் தமிழர்கள் ஆஸ்திரேலியாவின் பல கலாச்சார சமூகத்துக்கு ஆற்றும் பங்களிப்புகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது.

18 மே 2009, இலங்கையின் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவின் நிறைவைக் குறிக்கிறது. இலங்கை உள்நாட்டுப் போரில் குறைந்தது 100,000 பேர் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிடுகிறது.

ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகள் மற்றும் அவர்கள் நமது பன்முக கலாச்சார சமூகத்துக்குச் செய்யும் பங்களிப்புகள் அளம்பெரியவை.

### கனடா நாடாளுமன்றும் தமிழ் இனப்படுகொலைதான் என்று அங்கீகரித்தது

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என கனடிய நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஏற்றுக் கனடா நாடாளுமன்றம் அங்கீகரித்தது.

இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் நாடாளுமன்றமாகக் கனடா நாடாளுமன்றம் அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இதற்கான பிரேரணையை ஸ்கார்பரோ- ரூஜ் பார்க் தொகுதி (Scarborough-Rouge Park) கனேடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி (Gary Anandasangaree) 19.05.2022 முன்வைத்தார்.

இந்த பிரேரணையை நாடாளுமன்றில் அனைத்துக் கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நிலையில், தமிழ் இனப்படுகொலைத் தீர்மானம் ஏகமனதாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதியைத் தமிழ் இனப் படுகொலை தினமாக ஏற்று அங்கீகரிக்கும் உலகின் முதலாவது நாடாளுமன்றம் கனடாவாகும் என ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கனடா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது பல வருடகால உழைப்பாகும். தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலரது உழைப்பின் உச்ச விளைவாக இது நடந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான ஆதரவை அரசு வழங்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கை விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதில் ஆர்வமுள்ள தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான ஆதரவை அரசு வழங்கும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் கேகாலை நெலுந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வேகா காரை உருவாக்கிய கலாநிதி ஹர்ஷ சுபசிங்கவின் பசுமை இல்லத்தைப் பார்வையிடுவதற்காக நேற்றுச் சென்றபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்துக்காக இவ்வருடம் 100 பிரதேச செயலகப் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக 25 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும், இரண்டாம் கட்டமாக 75 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் விவசாயத்தை நவீனமயப்படுத்தத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

இந்த நாட்டின் விவசாய துறையில் 07 வருட அனுபவத்தை கொண்ட 'ஏஜ குறோ' நிறுவனத்தினால் பசுமை இல்லம் மற்றும் திறந்த பயிர்ச்செய்கை உள்ளிட்ட இரு பிரிவுகளும் தானியக்க முறைமையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ற வகையில், பசுமை இல்லத் திட்டங்கள் இந்த நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பசுமை இல்லங்களுக்கான சேவை மற்றும் பராமரிப்புச் சேவைகளும் வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனத்தால் கேகாலை நெலுந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் முதலாவது பசுமை இல்லம் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. தக்காளி, மிளகு, சலாது உள்ளிட்ட விளைச்சல்கள் இந்த இல்லத்தில் பயிரிடப்பட்டுள்ளன. காளான் உற்பத்திக்குத் தனியாதொரு பிரிவும் நிறுவப்பட்டுள்ளது.

தற்போது 'ஏஜ குறோ' நிறுவனத்தின் பெருமளவான உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் நிலையில் உள்நாட்டு வர்த்தக நிலையங்களிலும் இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் விநியோகிக்கப்படுகின்றன.

அதேபோல் இந்த நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பசுமை விவசாயத்துக்கான தானியக்க இயந்திரங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கும் விநியோகிக்கப்படுகின்றன. 'ஏஜ குறோ' தேசிய பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படும் வகையில் 'ஏஜ' தொடர்பான உயர் கல்வி வாய்ப்புக்களுக்கான வசதிகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எதிர்கால பசுமைப் பொருளாதாரத்தின் அடையாளமாகும். இத்தகைய தனியார் தொழில் முனைவோரின் வழிகாட்டுதலின் கீழ் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரிவான விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை நாட்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி இவ்வருடம் 100 பிரதேச செயலாளர் பிரிவுகளை நவீன விவசாயத்துக்குப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் தொழில்முனைவோருக்கும் இந்த திட்டத்தில் இணைவதற்கு வாய்ப்பு உள்ளது. இதற்குத் தேவையான பயிற்சி மற்றும் நிதி வசதிகளை அரசு வழங்க திட்டமிட்டுள்ளது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு இணையாக உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த அளவு நிலத்தில் அதிக அறுவடையைப் பெற வேண்டும். அதற்கு நவீன விவசாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் நாட்டில் பசுமைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என நான் நம்புகிறேன்.– என்றார்.







# பொதுத்தேர்தலே முதலில் நடக்கும்

## ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர் உதயங்க தகவல்



“ஜ“ன் 16 ஆம் திகதிக்குப் பின்னர் நிச்சயம் நாடாளுமன்றம் கலைக்கப்படும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலே நடத்தப்படும் என்பதை மீண்டும் உறுதியாகக் கூறுகின்றேன்.”

– இவ்வாறு ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கே.ஜி.பி. என்ற உளவு அமைப்புடன் தனக்குத் தொடர்பு இருப்பதால் எல்லா விடயங்களும் முன்கூட்டியே தெரியவரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ரஷ்யப் போருக்குக் கூலிப்படைக்கு ஆட்கடத்தும் பிரதான சூத்திரதாரி உதயங்க வீரதுங்க என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்துள்ளார். ஆனால் ரஷ்யா சென்றுள்ள தரப்பினரை. நாட்டுக்கு அழைத்து வரக்கூடிய ஆளுமை தனக்கு இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காகத் தனக்கு தூதுவர் பதவி தேவையில்லை என்றும், எனினும், இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டால் நிச்சயம் இதனைச் செய்ய முடியும் என்றும் உதயங்க வீரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.


# கடற்படையினருக்குப் பதவி உயர்வு!

15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு 3 ஆயிரத்து 146 கடற்படையினர் அடுத்த தரத்துக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கடற்படை இதனைத் தெரிவித்துள்ளது.

15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு, முப்படைத் தளபதி மற்றும் ஜனாதிபதியின் ஒப்புதலுடன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, 3 ஆயிரத்து 146 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.







பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University Students' Union
University of Jaffna

Patron : Prof. S.Srisatkunarajah (Vice Chancellor)

Senior Treasurer : Dr. R.Prasanthan (Senior Lecturer - Grade II)

President : Mr. K.Thuvaragan
Vice President : Mr. Y.Mayooran
Secretary : Mr. S.Sinthujan
Junior Treasurer : Mr. P.Kinthujan
Editor : Mr. N.Mayuresh
Committee Members :
Mr. S. Sivarathan (President, Faculty of Management Studies and Commerce)
Mr. Y. Nevilkumar (President, Faculty of Arts)
Mr. N. Vithushan (President, Faculty of Science)
Mr. Edwin Joy Vithushan (President, Faculty of Medicine)
Mr. E. Janakanthan (President, Faculty of Agriculture)
Mr. T.Niveksham (President, Faculty of Allied Health Sciences)
Mr. S.Ainkaran (President, Faculty of Technology)
Mr. D.S.D.Kumara (President, Faculty of Engineering)
Mr. J. Dilaxan (President, Unit of Siddha Medicine)
Mr. R. Harshan (President, Sir Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts)

16.05.2024

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகும் நினைவு கூறும் உரிமை !


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University Students' Union
University of Jaffna

நன்றி

Mr. K. Thuvaragan, President, University Students' Union, University of Jaffna

Mr. S. Sinthujan, Secretary, University Students' Union, University of Jaffna

# நினைவேந்தும் உரிமைகளைத் தடுப்பது நம்பகமற்ற நீதித்துறையை நிரூபிக்கிறது

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விசனம்

வடக்கு – கிழக்கில் நினைவு கூரும் உரிமைகளைத் தடுக்கும் செயற்பாடுகள் பெயரளவிலாவது கூறப்படும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கையின் நீதிக்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து வித உள்ளகப் பொறிமுறைகளும் நம்பகமற்றவை என்பதனை தொடர்ந்தும் நிரூபிக்கின்றன எனத் தெரிவித்துள்ளது.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகும் நினைவு கூரும் உரிமை தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:–

இறுதிக்கட்ட ஈழப்போரின்போது சிறிலங்கா இராணுவத்தினால் பாதிக்கப்பட்டு இனப்படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை நினைவேந்தி, தமது உறவுகளை அஞ்சலிக்கும் நிகழ்வாக முன்னெடுக்கப்படும் "முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை" நினைவேந்தல்கள் வடக்கு – கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பெங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறிலங்கா காவல்துறை, இராணுவம் உள்ளிட்ட படைத்தரப்புக்களினால் நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்டு நினைவு கூரும் உரிமைகள் மறுக்கப்படும் வன்செயல்கள் அரங்கேறிவருகின்றமையை மாணவர் சமூகமாக கூர்ந்து நோக்குகின்றோம்.

அண்மையில் திருகோணமலை சேனையூர்ப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியினைப் பரிமாறிப் போரில் இனப்படுகொலைக்கு உள்ளானவர்களை நினைவு கூர்ந்த மக்கள் சிறிலங்கா காவல்துறையினால் கைது செய்யப்பட்டமை மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கிய பொதுமக்கள் சிறிலங்கா காவல்துறையினால் அச்சுறுத்தப்பட்டு, நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியும் உள்ளன.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பென்பது ஆள்புல மற்றும் குடிசன ரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில், நினைவேந்தலுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சிறிலங்கா படைத்தரப்புக்களினால் கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்களிற்கு உள்ளாக்கப்படுவதோடு, அவற்றினைத் தடுக்கும் செயற்பாடுகளில் தீவிரத் தன்மையுடன் ஈடுபடுகின்றமையினை அண்மைக்காலங்களில் நோக்கக் கூடியதாகவுள்ளது.

அனைத்துலகச் சமூகத்தில் நினைவு கூரல் என்பது மனித உரிமைகளாக மதிக்கப்படும் நிலையில், 2009 ஆண்டு ஈழப்போரில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைவேந்தும் வகையில் மே 18 – முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல்களினை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். ஈழப்போர் முடிவிற்கு வந்ததன் பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு முறையான உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தல்களேதும் வழங்கப்படாதவொரு நிலையில் போரின் வடுக்களிலிருந்தும் அதன் கொடூர முகங்களிலிருந்தும் விடுபடுவதற்கான உளவியல் ஆற்றுப்படுத்தலுக்கான மாற்றாக நினைவேந்தல் நிகழ்வுகள் அமைந்திருக்கின்றன.

சிறிலங்காவின் படைத்தரப்புகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான நீதி என்பது சாத்தியமற்றுப் போய் சிறிலங்கா நீதிக்கட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் அண்மைக்காலங்களில் நினைவேந்தலுடன் தொடர்புடைய நிகழ்வுகளை தடுத்தல் மற்றும் முன்னெடுப்பவர்களை அச்சுறுத்தல்களிற்கு உள்ளாக்கும் சம்பவங்கள் யாவும் தொடர்ந்தும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை உளநெருக்கடிகளிற்கு உள்ளாக்குகின்றன.

நினைவேந்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொதுமக்களை ஆங்காங்கே அச்சுறுத்தித் தடுப்பது மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அப்பாவிப் பொதுமக்கள் மீது பிரயோகிப்பதனூடாக நினைவேந்தல் செயற்பாடுகளிலிருந்து தமிழ் மக்களை விலக வைப்பதற்கு சிறிலங்கா அரசு முழு வீச்சில் செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக, மக்களின் நினைவுகளினை அழிப்பதற்கு முயல்வதனால் சிறிலங்கா அரசும் அதன் படைத்தரப்புக்களும் தமிழ் மக்கள் தமது உரிமைகளிற்காக கூட்டுச் சேர்வதனையும் தம்மீது

தொடர்ச்சி▼

# நினைவேந்தும் உரிமைகளைத் தடுப்பது நம்பகமற்ற நீதித்துறையை நிரூபிக்கிறது

தொடர்ச்சி▲

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயன்முறைகளிற்கு எதிரான துலங்கல்களை வெளிப்படுத்தவும் முடியாதவொரு நிலையினை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

தமிழ் மக்களின் வலிகள் கூறும் நினைவுத் தூபிகளை அழித்தல் மற்றும் தமது போர் வெற்றிச் சின்னங்களை நிறுவுவதன் ஊடாக தமிழ் மக்களின் நினைவுகளை அழிப்பதில் பெரிதாக எதையும் சாதித்திராத சிறிலங்கா அரசு, முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயலென்பது தமிழ் மக்களிடையே முன்னரை விட எழுச்சியோடு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனைத் தடுப்பதனூடாக தனது ஆக்கிமிப்பை சாதித்து விட முனைகின்றது.

இதுபோன்ற நினைவு கூறும் உரிமைகளை தடுக்கும் செயற்பாடுகள் பெயரளவிலாவது கூறப்படும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவதோடு, சிறிலங்கா அரசின் இதுபோன்ற செயல்கள் யாவும் அனைத்துலகச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்கள், பிரகடனங்களை மீறுவதோடு, சிறிலங்காவின் நீதிக்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து வித உள்ளகப் பொறிமுறைகளும் நம்பகமற்றவை என்பதனை தொடர்ந்தும் நிரூபிக்கின்றன. – என்றுள்ளது.





# கிழக்கில் வாழைச்சேனையில் நாய்கள் பராமரிப்பு நிலையம்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைப்பு

(பழுவூரான்)

கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் பராமரிப்பின்றியும் கவனிப்பாரற்றும் பொது இடங்களில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கென்று தனியான காப்பகம் ஒன்று ஆளுநரின் ஆலோசனையுடன் கிழக்கில் வாழைச்சேனை கும்புறு மூலையில் முதல் தடவையாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் இவ்வாறான காப்பகங்களை திறந்து வைத்து, பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை தெரு நாய்களின் தொல்லையில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

இப்பராமரிப்பு நிலையத்தில் பேணப்படும் நாய்களுக்குத் தடுப்பூசிகள் செலுத்துதல், காயங்களுக்கு மருந்து கட்டுதல், கருத்தடை போன்ற மருத்துவச் சேவைகள் மற்றும் நாய்களைத் தமது வளர்ப்பிற்காக பெற்றுக் கொள்பவர்களும் பலன் பெறுவதற்கு ஏற்ற வகையில்



இக் காப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.நவநீதன் தலைமையில் நடைபெற்ற திறப்பு நி கழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளரும், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமாகிய என்.மணிவண்ணன் கௌரவ அதிதியாகவும் பங்கு கொண்டனர். மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ், வாழைச்சேனை சுகாதார வைத்தியஅதிகாரி, கால்நடை வைத்திய அதிகாரி மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




**1. ஊரலார் கேள்வி :- தமிழரசுக் கட்சிக்குள் உடைவு ஏற்படப் போகிறதாமே?**

**உலக்கையார் பதில் :-** நீங்கள் அப்பாவியாய் இருப்பதால்தான் இப்படிக் கேட்கிறீர்கள். தமிழரசுக் கட்சிக்குச் சம்பந்தன் பெருந்த லைவராய்ப் பொறுப் பேற்ற பின்பு அங்கு அன்றாடம் உடைவு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதுவரை கட்சி இரண்டாகப் பிளவுபடவில்லையே தவிர, அன்றாடம் கட்சியில்



உடைவுகளுக்குக் குறைவென்பது இருக்கவே இல்லை. முக்கியமாக நாடாளுமன்றப் பதவிகளுக்காகத் தலைவர்கள் (?) பிடித்த சண் டைகளை என்னென்பது? ஆளை ஆள் கழுத் தில் ஏறி மூக்கைக் கடிக்காத குறைதான்.

தலைவர் அந்தச் சண்டைகளைக் கட்டுப்படுத்தாத தன் விளைவுதான், கட்சி உடைபடப் போவதாக வரும் இன்றைய செய்திகளின் அடிப்படை. என் னைப் பொறுத்தவரை இன்றைய நிலையில் கட்சி உடைபட்டுவிட்டால் நல்லதென்றே கருதுகிறேன். நேசமில்லாத நட்பை விட வலி மையான பகையே நல்லது என்கிறார் ஔவை யார். 'வாசமிலா வங்கணத்தில் நன்று வலிய பகை' என்கிறது அவரது பாடல் (வங்கணம் என்றால் நட்பு என்று அர்த்தம்). சுயநலத் தேவை களுக்காய்க் கைகொடுத்துக் கொள்வதிலும், கட்டிப்பிடித்துக் கொள்வதிலும் எங்கள் தலைவர்கள் தேர்ந்த நடிகர்கள் ஆகிவிட் டனர். அவர்களது கைகளுக்குள் எதிராளியைக் குத்து வதற்கான கத்தி எப்போதும் தயாராகவே இருக்கின்றது. இந்நிலையில் ஒரு கட்சி இருப்ப தைவிட, அது ஆயிரம் துண்டுகளாக உடைந்தா லும்கூடப் பரவாயில்லை என்பேன்.

சிறீதரன், சுமந்திரன் ஆகியோர்களுக்கிடை யிலான பகை 'றிப்பயர்' பண்ண முடியாத அளவிற்கு மோசமாகிவிட்டது. காவடிக்குச் செடில் பிடிப்பது போய் அவர்கள் 'செடிலுக்கு' ஏற்ப காவடியாடத் தொடங்கிவிட்டார்கள். செடில்பிடிப்போர் கடல் கடந் தும் வருவதாகக் கேள்வி. இந்தக் கயிறிழுப்பில் தமிழினத்தின் கழுத்தை நெரிப்பதைவிட, அவரவர் பாட்டிற்கு அவரவர் பலத்தை நிரூபித்து முன் னேறுவதுதான் உகந்தது.

**சல்லடையார் சலிப்பு :-**
**'விநாசகாலே விபரீத புத்தி'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. ஊரலார் கேள்வி :- கிளிநொச்சியில் நடந்த 'மே' தினக் கூட்டத்திற்கு சிறீதரன் சுமந்திரனை அழைக்காதமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. 'குறுநில மன்னர்' தன் பிர தேசத் திற்குள் எதிரியைப் பிரவேசிக்க விட மாட்டார்தானே! காக்கை கட்டிய கூட்டுக்குள் குயில் முட்டையிட்டு வாழ நினைப்பதும் தவறு



தான். முடிந்தால் சுமந் திரன் தன் ஆதர வாளர்களைக்கூட்டித் தனிக்கூட்டம் நடத்திக் காட்ட வேண்டும். இரண்டுபேரும் பகிரங்கமாக வாளுருவி விட்டார்கள். இனிக் கண் ணியத்திற்கு இடமிருக்கப் போவதில்லை.

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

மே தினம் என்பது தொழிலாளர்களுக்கான தினம். அத் தினத்தைத் தலைவர்கள் தமக்காக் குகிறார்கள். வலியது மெலியதை விழுங்கும் என்பதுதான் இயற்கை நியதி. இனி, யார் வலியவர், யார் மெலியவர் என்பது விரைவில் நிரூபிக்கப்படும்.

'வஞ்சிக்கோட்டை வாலிபன்' எனும் படத்தில் வரும் பத்மினி, வையந்திமாலா போட்டி நடனத் திற்கான 'கண்ணும் கண்ணும் கலந்து' எனும் பாடலுக்கிடையில், பி எஸ் வீரப்பா 'ஹா... ஹா..... ஹா....' எனப. பலமாய்ச் சிரித்து 'சபாஷ்! சரியான போட்டி' எனச் சொல்வது போல, இனித் தமிழ் மக்களும் 'சபாஷ்' சொல்லி இவர்களின் போட்டியை ரசிக்க வேண்டியதுதான்.

**சல்லடையார் சலிப்பு :-**
**தொழிலாளர் புரட்சி நாளில் தலைவர்களின் புரட்சி......**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- நமது நாட்டில் 'சைவமும் தமிழும்' எனும் தொடரைப் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். ஒரு மொழிக்கு சமயத்தின் அடையாளமும் ஒரு சமயத்திற்கு மொழியின் அடையாளமும் தேவைதானா ?**

**உலக்கையார் பதில் :-** தேவைதான்! சைவத் தில் இருந்து தமிழை நீக்கினால் சைவம் ஏழைச்சமயம் ஆகிவிடும். தமிழில் இருந்து சைவத்தை நீக்கினால் தமிழ் ஏழைப்பாஷை ஆகிவிடும். இவை இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். பிரிக்க நினைப்பது இரண்டிற்கும் நல்லதல்ல.

**சல்லடையார் சலிப்பு :-**
**ஒரு வைஷ்ணவர் இதைச் சொல்வதுதான் சிறப்பு. ஹீ....ஹீ....ஹீ.... எப்படிக் கொழுத்திப்போட்டன் பார்த்தியளே?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :- திருவாசக அரண் மனை, திருமந்திர அரண்மனை, திருக் குறள் வளாகம் என்பவற்றை அமைத்து கருங்கல்லில் அந்நூல்களைப் பதிவு செய்து வைத்துவரும் கலாநிதி ஆறு திரு முருகன் அவர்களின் வரலாற்றுப் பணிபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** சந்தேகத்திற்கு இடமில் லாமல் அவை பாராட்டத்தகுந்த பணிகள்தான். இப்பணிகள் ஈழத்தமிழரைப் பெருமைகொள்ளச் செய்யும் என்பதும் உறுதி. ஆனாலும் அதுபற்றி என் மனதில் மாறுபட்ட சில கருத்துக்களும் இருக்கவே செய்கின்றன.

பாதுகாப்பில்லாமல் ஓலைச்சுவடிகளில் உயர்நூல்கள் இருந்த காலத்தில், அவற்றைக் கல்லில் பதித்து வைக்கும் முறைமை இருந்தது. இன்று நவீன வளர்ச்சியில், ஆயிரக்கணக்கான நூல்களை ஒரே நேரத்தில் பதிப்பித்து வெளியிடு கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்நூல்களை 'லமினேஷன்' என்றும் மென்பொருள் பதிவு என்றும் பலவகையாகப் பாதுகாப்பதற்கும் வழிபிறந்திருக்கிறது. இந்நிலையில் உயர் நூல்களைக் கல்லில் பதிப்பிக்கும் இம் முயற்சியின் முக்கியத்துவம் சிறிது குறைந் திருப்பது என்னமோ உண்மை.

இந்நூல்களைப் பதிவு செய்யும் இடங்களை ஆலயங்களாக மாற்றுவதன் அவசியம் பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே ஆயிர மாய் கோயில்கள் விரிந்திருக்க, இவ்விடங்க ளையும் ஆலயங்களாய் மாற்றுவதன் பயன்பாடு பற்றியும் கேள்வி எழத்தான் செய்கிறது.

செஞ்சொற்செல்வர் தமிழ்த்துறையில் இருந்து சமயத்துறைக்குள் நுழைந்தவர். அதனால் இந்நூல்களை வெறுமனே கல்லில் பதித்து விட்டுவிடாமல், மக்களின் மனதில் பதிக்கவும் அவர் வழி செய்யவேண்டும். மேற்படி இடங்களில் ஆண்டுக்கு ஒருதரமேனும் அந்தந்த நூ ல்கள்பற்றிப் பெருவிழாக்கள் எடுத்து மக்களை அந்த நூல்களில் புலமைபெற வைத்தால்த்தான் அவரது இம்முயற்சி பயன்செய்யும் என்று கருதுகிறேன். இல்லையேல் வரலாற்றில் திருமுருகன் பதிவாவாரே தவிர இந்நூல்கள் பதிவாகும் என்று தோன்றவில்லை.

கம்பன் கழகத்தை நாம் ஆரம்பித்த காலத்தில், பேரறிஞரும், யாழ் இந்துக்கல்லூரியின் முன் னாள் அதிபருமான மறைந்த என்.சபாரட்ணம் அவர்களைச் சந்தித்து ஆசிபெறச் சென்றோம். அப்போது அவர், 'ஷேக்ஸ்பியரின் சொந்த ஊரில் அவரது நாடகங்கள் தினந்தோறும் இடைவிடாது நடாத்தப்படுகின்றன. அதனால் அந்த ஊர்க்காரர்கள் எல்லோருக்கும் அவரது நாடக வசனங்கள் 'அத்துப்படியாய்' ஆகியிருக் கின்றன. நீங்களும் கம்பன் கழகத்தைத் தொடங் கினால் யாழ்ப்பாண மக்கள் அனைவருக்கும் கம்பகாவியம் 'அத்துப்படி' ஆகவேண்டும். அதைச் செய்தால்தான் உங்களது முயற்சி வெற்றியடையும்' என்றார். அவரது கோரிக் கையை ஓரளவு நாம் நிறைவேற்றினோம்.

அவர் அன்று எமக்குத் தந்த ஆலோசனையை,



இன்று அப்படியே திருமுருகனிடம் ஒப்படைத் துவிடுகிறேன். நல்லதே நடக்கட்டும்.

**சல்லடையார் சலிப்பு :-**
**திருமுருகனார், கற்கோயிலாய் அமைத்தவற்றைச் சொற்கோயிலாய்த் தருவாரா?**

✦✦✦✦✦✦✦✦✦✦





# குருநகர் கரையோரவீதி தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் ஆளுநரும் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் சுற்றுச் சூழல் தூய்மைப்படுத்தலும், விழிப்புணர்வு செயற்பாடும் நடவடிக்கை குருநகர் பகுதியில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலரும் இந்தக் கரையோரத் தூய்மைப் படுத்தல் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

குருநகர் 26 ஆம் வட்டார கரையோர வீதியில் இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தை யாழ்ப்பாணம் முழுவதும் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வீட்டு கழிவுகளை வீதியில் வீசுவதை தடுக்கும் வகையில், அவற்றை தரம்பிரித்து சேகரிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்ட மர நடுகை நிகழ்விலும் ஆளுநர் கலந்துகொண்டார்.



















# வடபகுதிக்கு ஜனாதிபதியின் வருகை முன்னேற்பாடுகளில் டக்ளஸ் தீவிரம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு வடமாகாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதியின் விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை முன்னெடுத்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அது தொடர்பான முன்னேற்ற ஏற்பாடுகள் குறித்து ஆளுநர் அலுவலகத்தில் துறைசார் தரப்பினர்களுடன் கலந்துரையாடலொன்றை முன்னெடுத்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ள நிகழ்வுகள் இடம்பெறவுள்ள இடங்களையும் நேற்றையதினம் அவர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# மட்டு நகர் நுழைவாயில் பிள்ளையாரடியில் பொலிஸ் அடாவடியை மீறி கஞ்சி பரிமாறல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் நுழைவாயிலுள்ள பிள்ளையாரடியில் முள்ளிவாய்கால் கஞ்சியை மக்களுக்கு கொடுக்கவிடாது வீதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டுத் தடுத்து அடாவடித்தனம் மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்கு மத்தியிலும் பொலிஸாரை மீறி பொதுமக்கள் வாகனங்களை நிறுத்தி கஞ்சியை வேண்டி அருந்திய சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

சிவில் சமூக ஏற்பாட்டில் சமூக செயற்பாட்டாளர் வி.லவக்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை மட்டு நகர் நுழைவாயில் உள்ள பிள்ளைார் கோவிலின் முன்னால் தமிழின இனவழிப்பு வாரத்தின் 6 ஆம் நாள் கஞ்சிவழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியேந்திரன், ஞா.சிறிதரன், தமிழ்ர் விடுதலைக் கூட்டணிக் கட்சி தலைவர் அருண்தம்பிமுத்து, மட்டு. மாநகரசபை முன்னாள் முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் மாநகர சபை உறப்பினர்கள் மற்றும் மதகுருமார், பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டு கஞ்சி காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது திடீரென அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு வீதியில் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டனர். இதன் போது வீதியால் சென்ற மக்கள் கஞ்சி குடிப்பதற்கு வாகனங்களை நிறுத்தி இறங்கிய போது அவர்களை அங்கு அனுமதியாது பொலிஸார் தடுத்தனர். இந்த அடாவடி செயற்பாட்டையடுத்து பொலிஸாரின் தடைகளை மீறிப் பெதுமக்கள் வாகனங்களை நிறுத்தி கஞ்சியை வாங்கி குடித்தனர்.















# வடக்கு மாகாண ஆளுநருடன் அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ்க்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சுங்குக்கும் இடையில் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கால்நடை உற்பத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், இயந்திர தொழில்நுட்ப பயன்பாட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனவும் இதன் போது ஆளுநர் தெரிவித்தார்.

காணி விடுவிப்பு, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வசதிகள் தொடர்பிலும் அமெரிக்க தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வீதிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றி திறக்கப்படுகின்றன எனவும் ஆளுநர் கூறினார்.

மேலும், வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய கண்காட்சி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கைக்கான அமெ ரிக்க தூதுவரிடம், ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

வடக்கிற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக உள்ளார் எனத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பிக்க உள்ளனர் எனவும், அதற்கான ஒத்துழைப்பை ஆளுநரிடமிருந்து எதிர்பார்க்கின்றார் எனவும் தெரிவித்தார். 27 வருடங்களின் பின்னர் அமெரிக்க அமைதி காக்கும் கழகத்தின் ஊடாக இலங்கையில் இலவச ஆங்கில மொழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார்.




# முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளுக்கு சந்நிதியில் விசேட ஆத்ம சாந்தி வழிபாடுகள்

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்றது

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் முள்ளிவாய்க் காலில் உயிர் இழந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்கான விசேட பூஜை வழி பாடுகள் நேற்றைய தினம் இடம் பெற்றன.

இந்த விசேட பூஜை வழிபாடுகளில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், உடுப்பிட்டித் தொகுதி இளைஞர் அணி செயலாளர் தயாபரன், கோப்பாய்த் தொகுதி இளைஞர் அணித் தலைவர் ரேகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொண்டைமனாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வட்டாரக்கிளை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.






# வவுனியா தவசிகுளத்தில் முள்ளியவாய்கால் கஞ்சி

(கே.வசந்தன்)

முள்ளிவாய்கால் 15 ஆம் வருட நினைவெள முன்னிட்டு வவுனியா, தவசிகுளத்தில் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் பலர் இணைந்து தவசி குளம் பிரதான வீதியில் வைத்து நேற் றுக் கஞ்சி பரிமாறினர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத் தின் போது மக்கள் முள்ளிவாய்கால் கஞ்சியை உணவாக உட்கொண்டே உயிர் பிழைத்தனர். அதன் 15 ஆவது ஆண்டினை நினைவு கூர்ந்தும், அடுத்த தலைமுறைக்கு அந்த வர லாற்றைக் கடத்தும் நோக்குடனும் இவ் வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கி பருகிச் சென்றமை குறிப்பிடத் தக்கது.









# சுகயீனமுற்ற நிலையில் யானை பள்ளமடு வயல் பகுதியில் மீட்பு

(மன்னார் நிருபர்)

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வயல் பகுதியில் சுகயீனமுற்ற நிலை யில் சுமார் 2 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிருடன் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

யானை ஒன்று சுகயீனமுற்ற நிலை யில் காணப்பட்டதை அப்பகுதி மக்கள் அவதானித்து உடனடியாக வன ஜீவரா சிகள் திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மிருக வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு



வந்து சுகயீனமுற்றுக் காணப்பட்ட யானையை பார்வையிட்டு யானைக்கு உரிய சிகிச்சை வழங்கும் நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றனர்.





# சாம் தம்பிமுத்து தம்பதிகளின் நினைவேந்தல் மட்டக்களப்பில்

(பழுவூரான்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருணதம்பி முத்துவின் தந்தையார் சாம் தம்பி முத்து தம்பதிகள் படுகொலை செய்யப்பட்டு 34 ஆண்டுகளுக்குப் பின் இடம்பெற்ற முதலாவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

அன்னாரது உருவப்படத்திற்கு அருண் தம்பிமுத்து மற்றும் குடும்ப உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களால் சாம் தம்பிமுத்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஆற்றிய அரசியல் அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமான சிறப்புரைகளும் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை சம்பந்தமான விசேட உரைகளும் நிகழ்த்தப்பட்டன.













# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அதன் தலைமைச் செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிப் பரிமாறப்பட்டது.

பெருமளவிலானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். பிள்ளைகளைப் பெற்றோர்கள் அழைத்து வந்து கஞ்சி பருக வைத்தமையோடு, கஞ்சியின் நோக்கத்தைப் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்தியமையையும் காண முடிந்தது,

இலங்கை அரசால் ஈவிரக்கமின்றி முன்னெடுக்கப்பட்ட போரில் மடிந்தவர்களையும், அதன் அழிவுகளையும் அவலங்களையும் அடுத்த சந்ததிக்கு எடுத்துச்சொல்லும் விதமாக வடக்குக் கிழக்கெங்கும் ஆண்டுதோறும் மே 12 தொடங்கி 18 வரையான காலப்பகுதி முள்ளிவாய்க்கால் வாரமாக உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. போரில் உயிர் காத்த ஒரேயொரு உணவான கஞ்சி ஒரு நினைவுக்குறியீடாக இக்காலப் பகுதியில் காய்ச்சிப் பரிமாறப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் கஞ்சி பரிமாறுதலின்போது தென்னம் பிள்ளைகளும் வழங்கி வைக்கப்பட்டன.














# சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்காலில் தரிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

ஜெயாவேல்சாமி தலைமையிலான சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர் ஐந்து நாள்களின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளி வாய்க்கால் பிரதேசத்தினுள் நேற்று முன்தின்ச்ம் பிரவேசித்தனர். அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலங்கையின் மிக நீண்ட பாதயாத் திரையான கதிர்காம யாத்திரை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் தொண்ட மானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தி லிருந்து ஆரம்பமானது தெரிந்ததே.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வள்ளிபுனம் பிரதேசத்திற்குள் இந்த யாத்திரீகர்கள் தங்கியிருந்தனர்.

சந்நிதி கலாநிதி மோகன் சாமி நேரடியாக வந்து அடியார்களுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்.

மழையும் வெயிலும் கலந்த கால நிலையில் சுமார் 130 அடியார்கள் இப் பாதயாத்திரையில் பங்கேற்று வரு கின்றனர்.

கொழும்பைச் சேர்ந்த பெர்னான்டோ என்ற சிங்கள அடியாரும் வழமைபோல கலந்துகொள்கிறார்.












# இன்றைய ராசி பலன்கள் - 18.05.2024




இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.இன்றைய நாளை நல்ல பலன் பெற பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கடின முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள்.

நீங்கள் செய்யும் பணியை விரும்பி செய்வீர்கள். சுய வளர்ச்சி மூலம் பணயில் முன்னேற்றம் காண்பீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்ப வேண்டும்.

உங்கள் துணையுடன் இன்றைய தினத்தை கொண்டாடு மகிழ்வீர்கள். இனிமையான வார்த்தைகளை பரமாறிக் கொள்வதன் மூலம் இருவரும் புரிந்துணர்வுடன் இருப்பீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகளை தவிர்க்க நீங்கள் எந்த விஷயத்தையும் தொடங்கு முன் யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தொடர்பும் சுமூகமாக இருக்காது.உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அமைதியாக அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும்.




உங்கள் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் இன்று தடைகள் நிறைந்து காணப்படும். விரும்பத்தகாத சூழ்நிலை இருந்த போதிலும் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் ஒருவிதமான வெறுமையை உணர்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. பணிகளை ஆற்றும் போது சில தாமதங்கள் ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப்படுத்துவீர்கள். இந்த உணர்வை தவிர்த்து உங்கள் துணையை நகைச்சுவை உணர்வோடு அணுக வேண்டும். பண வரவு குறைந்து காணப்படும். அதிக பணம் செலவாகும்.




இன்று ஆக்கபூர்வமான நாள். நபர்கள் மூலம் ஆதரவும் பலனும் பெறுவீர்கள். இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நல்ல தருணங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இன்று வரவுகள் அதிகமாக காணப்படும். சொத்துக்கள் வாங்குவதற்கு உங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆற்றலும் உறுதியும் கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று மிதமான பலன்களே காணப்படும்.இன்று பொறுமையாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்வதன் மூலம் எத்தைகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே திட்டமிட்டு அதன்படி பணிகளை ஆற்றினால் வெற்றி காண இயலும்.

உங்கள் துணையுடனான உறவில் அகந்தைப் போக்கு காணப்படும். இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

சோம்பல் தனம் காரணமாக இன்று பண இழப்பு நேரலாம். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். சூழ்நிலை கட்டுக்கடங்காமல் இருக்கும். எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.

இன்று பணியிடத்தில் கவனமின்மை காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த அளவு இணக்கம் காணப்படும். தவறான புரிந்துணர்வு காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும்.இன்று பெரிய அளவில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும் என்பதால் இன்று பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.இன்று ஒவ்வாமை காரணமாக அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உணவு முறையை ஆரோக்யமாக மாற்றி அமைத்துக் கொள்வது சிறந்தது.




இன்றைய நாள் மந்தமாக காணப்படும். உங்கள் நம்பிக்கைக்கு உயிர் கொடுங்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி பெற நம்பிக்கை முக்கியம்.

உங்கள் பணியில் ஏமாற்றமான சூழ்நிலைகள் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நீங்கள் பொறுமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு ஒருவருக்கொருவர் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் துணையிடம் பொறுமையையும் அன்பையும் வளர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் கவலைகள் ஏற்படும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று நன்மை தரும். உற்சாகமான அணுகுமறை மூலம் இன்றைய நாளை சிறப்பாக்கிக் கொள்ளலாம்.

சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பாராத அனுகூலங்கள் கிடைக்கும். சாதித்த உணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வை பகிர்ந்துகொள்வீர்கள். இது நல்ல புரிந்துணர்வு உருவாக வழி வகுக்கும்.உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்கள் சேமிப்பையும் உருவாக்க முடியும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.05.2024

## தனுசு

இன்று சுமூகமான நாளாக இருக்கும். உறுதியான போக்கு உங்களை நல்ல முடிவு எடுக்க வைக்கும். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாள். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டு பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் பெருகி காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு அதிகரிக்கும்.

உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலையில் இருப்பீர்கள். கணிசமான பணம் சம்பாதிக்க அதிர்ஷ்டம் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.

## மகரம்

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். இசையைக் கேட்டதன் மூலம் அமைதி பெறலாம். இது பிரச்சினைகளைக் கையாள உதவும். வாக்குவாதங்களிலிருந்து விலகி இருக்கவும். நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

உங்கள் பணியைக் கையாளும் போது கவனம் செலுத்த வேண்டும். இதனால் உங்கள் திறன் அதிகரிக்கும். தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும்போது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவு பாதிக்கும். பேசும்போது கவனம் தேவை.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. அதிக பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு.

## கும்பம்

இன்று நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். நல்ல பலன்களைக் காண நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். உங்கள் வளர்ச்சியில் மிகுந்த தடைகளை எதிர்கொள்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.பனியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டியது முக்கியம்.உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய போக்கை தவிர்த்து அமைதியாக இருப்பது நல்லது.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும்.

## மீனம்

இன்று பல நன்மைகள் நடக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனைத் தரும். சமூகத்தில் புதிய நபர்களின் தொடர்பு கிடைக்கும்.

உங்கள் திறமைகளை தனித்த அணுகுமுறை மூலம் வெளிபடுத்துவீர்கள். இதனால் பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்லறவு வளரும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். ஊக்கத்தொகை போன்ற கூடுதல் பண வரவு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





